ஓலை 38 | ஓசை 141 | மே 2023

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**

**செய்தற் கரிய செயல்.**

அடைவதற்கு அரியதை அடைவதற்கு ஏற்ற காலம் வந்து விட்டால் அப்பொழுதே தான் செய்வதற்கு அரிய செயல்களைச் செய்து கொள்க.

**Translation:**

When hardest gain of opportunity
at last is won,
With promptitude let hardest deed be done.

**Explanation:**

If a rare opportunity occurs, while it lasts,
let a man do that which is rarely to
be accomplished (but for such an opportunity).

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல

# இலக்கியப் பேரவை

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்


## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# சினம் கொள் மனமே



உன்னுரிமை பறிபோனால் உடைத்தெறிவாய் பொறுமை
உள்ளத்தை பிரதிபலி உண்மையுடன் நீயே
மென்மையினை காப்பதனால் மெச்சிடுவார் கண்ணே
மின்னலென வெட்டிவிடு மிதிப்போர்கள் முன்னே
நன்மையல்ல சினமென்று நம்பவைத்தார் நம்மை
நம்மதிப்பை குறைத்தாலும் நடிக்கிறோமே பொம்மை
புன்னகைக்கு பலனில்லை புயலாக மாறு
புவிதனிலே சீண்டுவோரை புரட்டிவிட மோது

பாரதியும் சொன்னானே பாட்டாலே அன்று
பாரினிலே ரௌத்திரமும் பண்புடனே பழகு
ஆரணமாய் நமைகாக்கும் அரணாகும் சினமே
அர்த்தமாக பயன்படுத்த அஞ்சிபலன் தருமே
காரிருளாய் சினமதுவும் கண்மறைக்க வேண்டாம்
காரணங்கள் இல்லாமல் கடிந்திடவும் வேண்டாம்
கூரியதோர் அம்பதனை கொதிக்கையிலே வீசு
குற்றத்தை காண்கையிலே குரலுயர்த்தி பேசு

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# ஹைக்கூ

அணையின் நீர்மட்டம்
குறைந்த அளவே காணப்படுகிறது
மண் திட்டுக்கள்.

அணையின் நீர்மட்டம்
குறைந்து காணப்படுகிறது
உலர் பாசியோடு படிகட்டுகள்.



நீரோடையில் சலசலப்பு
உருவம் பெறுகின்றன
கூழாங்கற்கள்.

காற்று வீசும்
தூரத்தில் மரங்கள்
இருந்தும் வியர்க்கிறது எனக்கு.

மலை முகடு
அழகாக இருக்கின்றன
அணையில் அலையலையாய் நீர் வளையங்கள்.

கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# அம்மா பழமொழிக்கூக்கள்

1
வறுமை ஒரு காலம்,
வளமை ஒரு காலம்.
எக்காலமும் அம்மா!

2
அகத்தின் அழகு,
அய்யோ! செல்களனைத்திலும்.
அன்பாய் மட்டும்.

3
இப்போது தோப்பு,
அவளில்லை எனில்.
எப்போதும் தனிமரங்கள்!



4
எக்கரையும்,
சிவப்பு மட்டுமே.
இவள் அக்கறை.

5
இவள் சொல்லுக்கு,
எப்போதும் மிச்சம் இல்லை.
அருள் வாக்கு.

6
கடல் திடலாகும்,
திடல் கடலாகும்.
அவள் மட்டும் மழை!

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி(மா)

# கவிதையாய் வாழப் பிறந்தவன்

இந்த
ஒரு வார்த்தையை
வேண்டாமென்று
தூக்கியெறிகிறது
என் கவிதை.
உனக்கு
வேறெந்த வார்த்தை
வேண்டுமென்கிறேன்.

அது
ஆட்காட்டி விரலால்
மையப் படுத்திக் காட்டுகிறது
என்னை.

என்னுடைய கவிதையில்
ஒரு வார்த்தையாய்
இருந்து விட்டுப் போக
எனக்கு
விருப்பமில்லை.



கவிதையாய்
வாழப் பிறந்தவனுக்கு
வார்த்தை
எவ்வளவு அவசியமென்று
கற்பிதம் செய்கிறது
இக்கவிதை எனக்கு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வாசி நேசி யோசி

புத்தகத்தை தினமும் வாசி
உன்னை தலை நிமிர்த்தி அழகுப் பார்க்குமே
அலைபேசியில் பொழுதை போக்குவதை நிறுத்து
மாற்றி யோசிக்க முயற்சி செய்திடு
வீட்டிற்கு வெளிச்சம் தருவது சாளரம்
அறிவுக்கு வெளிச்சம் தருவது நூல்கள்
வாசிக்காமல் யாருக்கும் அறிவு வளராது
மாணவப் பருவத்தில் புத்தகங்களை வாசி
ஊருலகத்தை அறிவாய் நீ
சிறகு இல்லாத புத்தகம் நம்மை
கற்பனை உலகிற்கு கொண்டு செல்லுமே
நல்ல நூல்கள் ஆருயிர் தோழர்
நல்ல நட்பை பிரிந்து நம்மால் வாழ முடியாது
புத்தகமும் அப்படியே
அறிவியல் உலகில் புது புது கண்டு பிடிப்புகள்
வளர வளர நம்மை நாமே செதுக்குவோம்
நாளும் தேடு புதிய புத்தகத்தை
விடியலில் வெள்ளியை தோன்றிடு நீ
வாசி நேசி யோசி
மூன்றும் முத்தான முத்துக்கள்
உணர்ந்து செயல் பட்டால் நீயே உலகின்
மிகப் பெரிய அதிர்ஷ்டசாலி.



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# கோடை மழை

கோடையில் வெப்பசலனம்
தந்திடும் அருட்கொடை.
உச்சி வெயிலின்
உச்சத்தைத் தணித்திடும்.
உச்சி முகர்ந்திடப்
பச்சிலை துளிர்க்கும்.



வறண்ட மண்மகளின்
வாட்டம் போக்கிட
இருண்ட வானில்
கருமுகில் திரட்சி.
காற்று தழுவிட
ஏற்றமாய் மழைத்தூறல்.

மரவேர்கள் குதூகலிக்க
கரக்கிளைகள் குலுங்கிட
இலை விரல்கள்
ஒய்யாரமாய் அசையும்.

கழனியில் பயிர்கள்
காற்றோடு ஆடும் பாலே.
மழலைகள் மகிழ்ந்தே
காகிதக் கப்பல் விடும்.

பனிக்கூழ் விற்பனை
பதுங்கி தடுமாறும்.
தேநீர் கடையைத்
தேடச் செய்யும்.

சாலையோர மக்கள்
சாடியே தூற்றுவர்.
இருப்பிடம் நனைந்ததால்
வசிப்பிடம் மாற்றுவர்.

இல்லத்தரசிகளோ
இல்லத்தில் செய்திடுவர் இன்னமுது.
இதமாய் மண்வாசம்
இல்லில் எண்ணெய் வாசம்.

புள்ளினமோ ஒடுங்கும்.
மண்டூகமோ மகிழ்ந்திடும்.
மண்மகளின்
பொறுமைக்குப் பரிசு
தண்ணென்ற கோடை மழை.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# உடைபட்ட ஓர் உண்டியலின் நையாண்டி வினாக்கள்

ஆலயம் வந்தால் ஆண்டவனை வணங்கி
ஆலயமுன் அமர்ந்திருக்கும் எளியோர்க்கு ஏதேனுமீந்தால்
அகிலத்தைப் படைத்தவன் ஆனந்தம் அடையானா?

ஆயாசம் நீங்க அறிதுயிலும் ஆண்டவனின்
அம்சமாம் சீனிவாசனென்ற திருமலைவாழ் இறைவனுக்காய்
அவன்பட்ட கடனை யடைப்பதாய் அங்கலாய்த்து
எல்லைகள் தாண்டியும் நீங்கள் பயணித்து
என்னுள் கோடிக்கணக்கில் பணத்தை நிரப்புவதேனோ?

கோயில்கள் எங்கெங்கும் பெரிதுபெரிதாய் இருக்குமெம்முள்
கொட்டிடும் பணத்தால் கடவுளுக்கென்ன பயனென
அறிந்துதான் கொட்டுகின்றீரா? பயனுமக்கதில் சிறிதேனுமுண்டா?
அகலவாய்திறந்து வாங்குகின்ற பணத்தால்பயன்னெனக் குத்தானுண்டா?

பாவம் தீருமென நீங்கள்நம்பி போட்ட
பணத்தைப் பத்திரப் படுத்தியது என்தவறா?
பத்திரப்படுத்துதல் சுயநலமென்பதால் உடைக்கப் பட்டேனா?
உடைக்கப்பட்டாலும் துயரமதை மறந்து உதவுவேனென்பதால்
உதிரம்சிந்தா வண்ணமுடைபட புண்ணியவரம் பெற்றேனா?




உண்டியலாய் உலகைப் படைத்தவன் முன்நானிருக்க
உலகைப் படைத்துக் காத்துக் கலியுகமுடிவில்
உலகையொரு நாளழிக்கும் எல்லாம்வல்ல இறைவனவனால்
என்னைக்கூட காப்பாற்ற இயலவில்லையே அதுயேன்?

என்னையும் என்னுள்வுள்ள அவன்பொருளையும் காக்கவியலாதவன்
என்னைக் காப்பானெனக் கைகூப்பி நீங்கள்யாவரும்
என்றுமவனை வந்துவணங்கிட உங்கள் தன்மைக்கண்டு
எள்ளி நகையாடாமல் எப்படியிருக்க முடியுமென்னால்?

என்னை உடைத்தவர் என்னுள் உள்ளதை
எனையுடைத்து எடுத்துவாழ்கவென மகிழ்ந்து நானங்கு
உடைபடுவதைக் கண்டும் காணாதவன்போல் இறைவன்நான்
உடைபடுமிடம் எல்லாமுணர்வற் றங்கு இருந்தானாவென
உடையானிடமுரி மையுடையீர் கேட்டுச்சொல்லுக எனக்கே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# புன்னகை மறந்த தேசம்!




நவீன உலகம் வளர்ச்சி பெறுகிறது
புதிய புதிய விடயங்களும் பிறக்கிறது
மனித மனமும் திசை மாறுகிறது
பணத்தின் பின் மனிதம் ஓடுகிறது
புன்னகையில் பூத்த உலகம் இது
தினம் தினம் புன்னகையை யாசிக்கிறது
புன்னகைக்க மறந்த இதயங்களை சுமந்து
உலகே புன்னகை மறந்த தேசமானது

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# பறக்கத்தான் ஆசை



பறக்கத்தான் ஆசை
வானில் மட்டுமல்ல வையகத்திலும்
வலி அறிய வாழ்க்கையில் விழி அறிய.

எதற்கும் ஓர் விலை உண்டு
இப்பிரபஞ்சத்தில்.

மனிதனால் சூழப்பட்டது
மனிதனுக்கே நிலைப்பட்டது.

ஒவ்வொரு விடையும் தடையாகவே
ஒவ்வொரு தேடலும் தேடலாகவே!
ஒவ்வொரு வழியும் வழியாகவே!
ஒவ்வொரு விதியும் விதியாகவே!
ஒவ்வொரு வினையும் வினையாகவே!
ஒவ்வொரு பயணமும் விபத்தாகவே!
ஒவ்வொருவர் கனவும் கனவாகவே!

மாறுதல்களும் மாற்றங்களும்
இப்படி ஒவ்வொரு மனிதன் வாழ்விலும்
பல சூழ்நிலையில்.

விழி மேல் நெருப்பு ஒன்று அருகினில் வாடுதே
படுக்கையும் பாய் மரம் போல் கடக்குதே

எதிர்த்து நின்று போராடி தன் கை நம்பிக்கை

நயத்தோடு நாளை நமக்காக
எதுவும் முதலில் பிழை அதுவே நிலை
நாளைய வாழ்வின் கலை.

சுகம் இல்லா வாழ்க்கையில் இன்ப துன்பங்கள்
வெற்றி தோல்வி அனுபவங்கள்
நம்முடன் தினம் பயணிக்கும் பறவை.

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# கவிதைக்கொத்து

**அ(சு)மங்கலி**

பாதியில் பறி போனதிற்காக,
காப்பாக பொட்டிடும்,
பூவை இழந்த பெண்களும்!




**விபத்து**

பாதுகாப்பில்லா பயணம்
செய்தோர் பாதி வாழ்விலே?
பல உறவுகள் பாராமல் படுக்கை பயணம்,
பாய்ந்தோடி செல்கிறார்களே!

**இறை பாதுகாப்பு**

படைத்தவர்களுக்கே பல காவல் விலங்குகள்,
பாதுகாப்புக்காகவா பழி தீர்க்கவா?
பயணம் செய்யவா?
பலவற்றிற்கும் காரணமறியா பாவம் செய்யும்
பலதரபட்டோரின் வினா?

**ராஜவாழ்வு!**

பாதுகாவலிலே பதவிசு வாழ்க்கை,
பார்த்தும் பார்க்காத பாதுகாவல் படைஅதிகாரிகள்,
பதவி பறிபோகும் பாழாகும் வாழ்வென்று,
பயந்து அடங்கி இருக்கின்றரே!

**பள்ளிக் கல்வி**

பார்த்து படிப்பு தர வேண்டிய தரமானவரும்,
தரங்கெட்டு தலைகுனிவை தான் கொடுத்து,
காப்பு அணிந்து கழிசடையாய் போவது ஏன்?

**காதல் வாழ்க்கை**

பார்த்து பார்த்து காத்து காத்து,
கரம் பிடித்தவளையும் பிடிக்காமல் பிடித்து,
பிடிவாதக்காரனும் பிடிக்காமல் போன,
பிடிபடா நாட்கள்
பாதுகாப்பற்றவையே, பாவையவளுக்குமே!

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# விடுமுறை நாட்கள்



பரீட்சை அட்டவணையை
பார்த்த நாள்முதலே
படிப்பதுடனே விடுமுறை
தொடங்கும் நாளை
எண்ணிஎண்ணிப் பார்த்ததும்

விடுமுறை வந்த நாள்முதலே
விளையாட்டுகளை ஆரம்பித்ததும்
சாப்பிடக் கூவிக்கூவி
அம்மா அழைத்தாலும்
ஐந்தே நிமிடம் என்றதும்
பொறுமை இழந்த அம்மா
பொத்தென்று முதுகில் போட
அலறியடித்து வீடு சென்று
அவசரமாக அள்ளித் தின்றுவிட்டு
அடுத்து விளையாட ஓடியதும்
அவிழ்ந்து விழும் கால்சட்டையை
அவசரமாக முடிச்சிட்டு
அந்தரத்தில் குட்டிக்கரணமடித்து
அழுக்கான புழுதி மண் போக
ஆற்றில் குதித்து குளித்ததும்
ஆனந்தமாகக் கழிந்த
விடுமுறை நாட்கள் இப்போதில்லை
அடுக்கடுக்காய் பகுதிநேர படிப்பு
அப்படியும் கிடைக்கும் நேரங்களோ
செல்லிடப்பேசியில் விளையாடி
செல்லரித்துப் போகிறதே.

கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# அலைகடலோடு ஒரு மடல்



அலைகளை
காணும் போதெல்லாம்
கலைகளோடு
ஏன் பரிட்சயமில்லை? யென்ற
வினா வெழுப்பலில்
கால்கள் ஏங்குது.

காதோடு
நான் சொன்னதெல்லாம்
கரை மீதேறி
கண்டுவந்து
சொன்னதா? வென
கடிதமெழுதி
உரைப்பாயா?
கால்கடுக்க கண்கள்
வாயிற்கதவில்
நிலைத்திருக்கும்

என்
பாதம் தழுவிய
நுரைகளில்
பெயரெழுதி
வைத்து வந்தேன்

அலை கூவலின்
அறைகூவலில்
என் பெயர்
சொல்லி உனை
அழைத்ததா.

கண்டு வந்ததை
கண்களிலாவது
கதைப்பாயா!
கதவிடுக்கில்
மறைந்து நின்று
கனவுக்குள் வந்து
கதை சொல்வாயா!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# மனப்பேழை



பசுமை நினைவுகள் சுமந்து
செல்லும் நெஞ்சம் பாதை
மாறி செல்வதில்லை!

நிழற்சாலையோர அங்காடி
நினைவுப்படுத்தும் வறுமை
நாள்களை!

நெடுந்தொலைவு பயணத்தில்
சாளர இருக்கை பேசும்
ஆயிரம் கதைகள்!

அக நெருக்க நட்பு இடர்
காலத்தில் துணையாக
இருக்கும்!

கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# அறம்

வாழும் நாளெல்லாம்
இன்பத்தில் வாழ்ந்திட

அறமெனும் அற்புதச்
செயலை செய்திடு

வாழ்வு சிறக்க
நேர்வழியில் பயணித்து

வள்ளுவன் வரியினை
நாளும் வாசித்திடு

ஈகை குணத்தால்
இவ்வுலகையும் வென்றிட

அறத்தோடு வாழ்ந்திடு
புகழும் சேர்ந்திடும்

வறுமை வதைத்தாலும்
உள்ளம் மாறாதிருப்பின்


தூற்றும் உலகும்
வள்ளலென போற்றிடும்




கவிஞர் கோவை ஆனந்தன்,குமாரபாளையம்,கிணத்துக்கடவு

# அக்கறை மொழி

கொல்லும் நூறு வார்த்தைகளினிடை
கொஞ்சும் நின் வார்த்தைகளில் தஞ்சம்.
பஞ்சும் நெருப்பும் தொலைதூரமாக
பற்றி எறியும் ஆசைகள் மட்டும் மிஞ்சும்.



பிசைந்த சோற்று பருக்கைகள்
உற்று பார்க்க வதனத்தையே.
அதரங்களோ கேள்வி கேட்க
எண்ணங்கள் மட்டும் உனை சுற்றியே.

அக்கறை இல்லா நாட்கள் ரணமென கடக்க
இன்று அகம் நிறைத்தன அன்பாலே.
ஏதும் அறியா குழவி போல
புன்னகை மட்டும் பரிசோடு.

இராவோடு பகிர்ந்த பேச்சுக்களில்
பசியும் மறந்தனவாம்.
கலவியும் அற்று கரைந்தனவாம்.
கண்ணோடு மறைந்த நித்திரையிலே.

நிலவிடம் கதைக்கும் அவளும்.
நிசப்தம் விரும்பும் இவனும்.
நித்திரை இல்லா கனவுகளில் மூழ்கியே
நேசம் வளர்த்து நெஞ்சம் பகிர்ந்தனவாம்.

கவி வடித்தாள் காரணமின்றி
கண்ணீர் வடித்தால் கலவரமின்றி
காலையில் மறந்தால் சண்டைகளின்றி
காட்சியை படம் பிடித்தாள் இமைகளின்றி

இரசனை வாசம் வசந்தமாய் வீச
ரணமான நாட்களில் ரட்சித்தேன் எனையே.
புணர்வின் அவசியமின்றி படர்ந்தால்
தலையணையில் கன்னம் பதிக்க.
முழ்கிய சிந்தனையிலே

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அறிவுடைமை

அதிகாரம் : 43

அழிவிற்குக் காக்கும்
கருவியாம் அறிவு.
பகையில் கொல்வோரும்
தகர்க்கவியலா கோட்டையிது.

மனப்போக்கில் ஓடவிடாது
தீங்கின் நீங்கிக்காத்து.
நன்மைக்காய் எண்ணத்தை
செலவிடலே அறிவாம்.




எவர் உரைப்பதையும்
உளதுபோல் நம்பிடாது.
உள்ளது எதுவென
உயித்துணர்தலே அறிவாம்.

கேட்போர் புரிந்திட
எளிமை விளக்கமும்.
கேட்பதின் நுண்மை
ஆராய்தலுமே அறிவாம்.

உயர்குணத்தோர் நட்பிலும்
அவர்தொடர்பில் முன்மகிழ்ந்து.
பின்னின்று தூற்றலுமிலதே
மெய்ஞான அறிவாம்.

உலகத்தின் போக்கில்
உலகொடு பொருந்தி.
உயிரிலும் அதுபோல்
உய்வதே அறிவுடைமையாம்.

பின்வருதல் முன்னறியவல்ல
சாமர்த்தியத்தார் அறிவுடையர்.
அறிவிலாதார் அஃதை
அறிய இயலாதவரே.

அஞ்சிடும் அத்தியாவசியத்தில்
அஞ்சாதிருத்தல் அறிவீனமே.
அஞ்சுமிடத்தில் அஞ்சுவதே
அறிவுடைச் செயலாம்.

முன்னறிவுடைய மாந்தர்க்கு
பின்நடப்பது தெரியுமாதலால்.
நடுங்கும் பெருந்துன்பமும்
தனக்கு ஒன்றுமில்லையாம்.

அறிவுடையோர் அத்துணையும்
நன்மையாய் உடையோரே.
அறிவிலாதோர் எத்துணையிருந்தும்
ஏதும் இல்லாதோரேயாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# மௌனத்துக்குள் ஒளிந்திருக்கிறாய் பேரொலியாய்

விரலுக்குள்
ஒளிந்திருக்கிறாய்
பிள்ளையின் கருணையாய்

இருளுக்குள்
புதைந்து கிடக்கிறாய்
பெரு நிழலாய்

அமைதிக்குள்
ஆலிங்கனம் செய்கிறாய்
உடைப்பெடுத்த அணையாய்

கனவின் சிறகுகளில்
உட்கார்ந்திருக்கிறாய்
காதலின் அக்னியாய்

இதய எதிரொலியில்
விரிந்து கிடக்கிறாய்
உறக்கம் தொலைத்த வனமாய்

மீச்சிறு உள்ளம்
முனங்கிப் பேதலிக்கிறது
துளிநேசம் பெருக்கெடுத்துப்
பிரபஞ்சம்
நனைக்கையில்.



கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# யாவும் அவளே

காலம் இணைத்த இனிய உறவிது
தவறுகள் பல வாழ்வில்  நன்மை பயப்பன
இன்றே உணர்ந்தேன்
தவறின் முடிவில் கிட்டியது
உண்மை உறவது குழந்தை உள்ளம்
நட்பிற்கு அழகு,மொழி, அன்மை தேவையன்று
என்று உணர்தியவளே

நாம் சொல்லாமல் புரிந்துக் கொள்வதும்
நமக்கு புரியும் வரை கூறும் நட்பு கிட்டுவது வரம்
அவ்வரம் பெற்ற அதிசயன் யான்.
நட்பிற்கு ஆன்மா ஒன்றே
உருவம், அது பால் நிலைஅறியா
அவளின் உறவும் புனிதமானதே.




சேட்டைகள் பல கோடி
தமக்கைகள் உற்ற உறவினர்
வன்முறைகளும் வருடி வரும் காதல்களும்
அவர்வண்ணமே
பல மொழி பேசும் பார்வைகள்
பெண்ணிலை உரித்தாக கொண்ட நாணம்
மழலை குறும்புகள் அவளின் இயற்கை அணிகலன்கள்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்று ஏட்டில் எழுதியவனை
மடயன் என்று கூறுவாள்
எனின் அவள் உறவிலும் உண்மையிலும்
கலங்கமற்ற மனம் கொண்டவள்
காலம் பலரை தன் வசப்படுத்தியதை
உணர்ந்த என் உணர்விலும்
மாறா நிதர்சனம் நீயே.

எது இல்லை  அடக்கமான அறிவு, அன்பான அரவணைப்பு.
தன் சுற்றத்தாருடன் அன்பினில் சுழலும்  சக்கரமாய்.
விழிகளுக்கு கவசமாய் இமைமுடிகள்,
உன்விழி கூர் ஆயுதமாய் இருக்க
கவசமற்று எதிர்ப்பார்வை  சுட்டத் துடித்தேன்.
பல தோழ்விகளை நேர்ந்தும்  மேலும் அதன்பால்
ஓர் ஈர்ப்பு தோழமையின் ஆறுதல் எண்ணி.

வாழ்வின் பல நிகழ்வுகளை அனுபவமாக்கியவள்,
உரிமை கொண்டாடும் உறவை விட,
உறவை கொண்டாடும் தோழமை சிறந்தது.

கவிஞர் நாசிர், கிழக்குப் பல்கலைக்கழகம்

# உழைப்பின் பெருமை

உயர்வைத் தரமாய் உவகை வரமாய்
வியர்வை உரமாய் வினையோ சரமாய்
உழைக்கும் மாந்தரால் தழைப்பர் வேந்தர்
களைப்பை ஏற்று விளைச்சல் வார்ப்பர்

கரடு முரடாய் கரங்கள் மாறி
இரவும் பகலும் சிறப்பாய்த் தேறி
சிரம் மேல் பாரம் சுமக்கும் கூலி
மரமாய் ஆகிக் காத்திடும் வேலி



விதையாய் வியர்வை நிலத்தில் சிந்தி
சதையும் அயர்வைச் சகித்து ஏந்தி
விருட்சமாய் விளைச்சல் தருவர் தொழிலாளர்
விந்தை ஆணிவேரே தனவந்தர் வழிகோலர்

குடும்பம் சிறக்க வழியும் பிறக்க
கெடும்புகள் நீக்க வலிகள் விலக்க
மேனியை வருத்திப் பெற்றிடும் ஊதியம்
மேன்மையை அருந்திடும் ஏற்றமிகு காவியம்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# மறைந்தோர் சுயம்

வட்ட மேசை மாநாடுகளில்
இதுவரை உண்மை புலப்படவில்லை

தெருமுனை மாநாடுகளில்
நேற்று வயதேறிய கன்னியும்
மாலை அவிழ்த்த மங்கையும் தான்
பழக்கமான புலக்க வசனங்களாயின.



நேற்று விடியலை
பேசிக் கொண்டிருந்தவனுக்கு
எதிர்வீட்டுக் காரனின்
சூசகம் தேவைப்படுகிறது

யாரோ ஒருவரை பேச ஆரம்பித்து
தன்னுடையே சுயமே
இடையிடையே எட்டிப்பார்க்கிறது
வார்த்தையை மறைக்க நினைக்கையில்
சட்டென வந்து நிற்கிறது
தவறிய சுயம்.

அவருக்கு அவனுக்கு
இவன் பொதுவானாம்
இணைத்து பேசிவிட
விடயம் ஒன்றானது.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# பேரவா

தானீன்ற மழலைகள்
தரணியிலே நலம்வாழ
கற்பதற்கு வழிப்படுத்தல்
தாயின் கடனன்றோ

சீவிச் சிங்காரித்து
சீருடை அணிவித்து
புத்தகப்பை சுமந்து
வழிகாட்டிச் சென்றிடுவாள்



தனக் கெட்டாக்
கல்விக் கனி
தன் பிள்ளை புசித்திட
தரணியில் போராடும்
தன்னிகரற்ற போராளி

இன்னல்கள் நிறைந்த
எதிர்காலத்தை வெல்ல
கற்றல் ஒன்றே
பெரும் வரப்பிரசாதம்

மகளேநீ பள்ளிக்கு
விருப்போடு சென்றுவா
நாளைய உலகத்தை
அறிவாலே வென்றுவா

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# நடைப் பயணமாய்



பேருந்து நிழற்குடை
பெய்ந்திடாத வானம்
மஞ்சள் விளக்கு
மங்கிய பொழுது
முழுநிலவும்
உன்னை முறைமாமன் போல
பின் தொடர,
வெட்கத்திலே நீ சிரிக்க
எட்டி நின்னு அது ரசிக்க

ஏக்கத்துல பட்ட தளிரும்
பட்டுப் போய் கிடக்க.
நின்னுகிட்டு நீ ரசிச்ச மரம் ஒன்னு
உனக்கு தாலாட்டு பாட்டு ஒன்னு பாட.

தாலாட்டு பாட்ட கேட்டு
தலையசைக்குது உன் கதோர கம்மலும்.
சாரைப் பாம்பு போல உன்னோட நடைக்கு
ஈடு கொடுக்க முடியாம
உருண்டோடி வருது என்னோட காலு ரெண்டும்.
கையசைத்து நீ அழைத்ததும்
என் கால்கள் இரண்டும் துள்ளி குதித்து வருகுது.

கவலைகள் நிறைந்து கிடந்த உன்ன
கால் தூரம் கால் நெடுக நடந்திடவே அழைக்க முயன்றேனே.
கால் மணி நேரம் வீணாய் போய் விடும் என்று
உந்தன் நினைப்பினை நான் நினைக்காமலே அறிந்தேனே
உன்னின் இன்பத்திலே பங்கெடுக்க அழைத்தாய்
ஆர்வமோடு வந்தேன் ஆனந்தத்தில் திளைத்தேன்
போகின்ற தூரம் குறைந்து உரையாடிய நேரம் அதிகரித்தது.

ஒரு நாள் துன்பத்திலும் பங்கெடுக்க அழைப்பாயா என்றிருந்தேனே
நீயோ அழைக்க மறுத்தாயே.
நானோ உந்தன் வெறுப்பினை இன்பமாய் ஏற்றிட
எட்டு வைத்து விரைந்தேனே.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# மீண்டும் அந்நொடி

துள்ளித் திரிந்த பள்ளிக் காலம்
துளிர் விடும் இளமை காலம்
துளிதுளி மழையில் நனைந்த தருணம்
துணியால் ஊஞ்சல் கட்டி ஆடிய காலம்

மழை நீரில் கப்பல் விட்டு
மலைகள் எல்லாம் துள்ளி ஏறி
மரத்தில் தாவிதாவி ஏறி
மரத்தில் மாங்காய் பறித்து உண்டு

சில்லறை பணத்தில் குச்சிமிட்டாய் வாங்கி
சிறுக சிறுக உண்ட தருணம்
சின்ன வீடுகட்டி விளையாடிய தருணம்
சிறியதாக கூட்டாஞ்சோறு ஆக்கிய தருணம்



ஆற்றங் கரையில் தாவி நீச்சலடித்து
ஆற்றோர வயலில் நடந்து திரிந்து
ஆற்று மீனை சமைத்து உண்டு
ஆலமர விழுதில் தொங்கி விளையாடி

ஆகாயத்து பறவைகளாக சுற்றித் திரிந்த
அந்த பசுமையான நொடிகள் மீளாதோ

கவிஞர் ஜஸூரா ஜலீல்

# ஹைக்கூ

கோடைவிடுமுறைக்குப் பின்
பள்ளி செல்லும் சிறுவன்
கையில் நுங்கு வண்டி

ஆயுத பூசை
பொட்டு வைக்கும் அப்பா
நடைவண்டியோடு மகள்!

அடைமழை நீரில்
எச்சமிடும் சிறு குருவி
தாமரைக்குளத்தில் புத்தர்

சித்ரா பௌர்ணமி
கூடும் கார்மேகத்தில்
அழகர் முகம்

கோடையில் மழை
காத்திருக்கும் விமான ஓட்டி
ஓடுதளத்தில் குருவிகள்



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# எனது கிராமத்து எல்லையில்

இருளுக்கு போர்வை போத்தி
சுடர்விளக்கு ஏற்றுகிறதா நிலவு ?
புல்லுக்கு மகுடமேற்றி
வெற்றிவிழா காணுகிறதா பனித்துளி ?
தென்றலுக்கு மேடை சமைத்து
சாமரம் வீசுகிறதா சோலை ?
அருவிக்கு ஆடைகட்டி
அழகு பார்க்கிறதா மலைமுகடு ?
கிளைகளுக்கு பாடம் நடத்த
பள்ளிக்கூடம் நடத்துகின்றனவா கிளிகள் ?
தலைகுனிந்த நாணல்களைத் தழுவி
நிமிர்ச் செய்கின்றனவா ஆற்றின் அலைகள் ?
கால்நடைகள் மேய்ச்சலில்
மகிழ்ந்தபடி உள்ளனவா மந்தைவெளிகள் ?
மாலை நேரத்து காட்சிகளை
படம்பிடிக்க உள்ளனவா தெருக்கள் ?
வானப்பரப்பில் மேகத் தேர்களை
வடம்பிடித்து இழுக்கவா பறவைகள் ?
கேள்விகளோடு காத்திருக்கிறேன்
இயற்கையை தொலைத்த
எனது கிராமத்து எல்லையில் !



கவிஞர் கா.ந.கல்யாணசுந்தரம்

# மனமே நீ மாறிவிடு

எது இல்லை என்று
மனம் ஏங்குகிறது.
ஏக்கம் என்பது இல்லாத
ஒன்றில் மட்டும் ஏராளம்.
ஏன் இந்த வாழ்க்கை என்று
போராட்டம்!
உன்னிடம் எது இல்லை என்று
யோசிக்காதே.
உன்னிடம் இருப்பது மற்றவரிடம்
இருப்பதில்லை.
இல்லை என்று சொல் இல்லாமல்
வாழ்வு என்பதே இல்லை.
இறைவன் அவன் பார்வையில்
நீயும் சிறந்த பிள்ளைதான்.
ஓடுகிற ஓட்டம் எதற்காக
அரை ஜான் வயிற்றுக்காக.
பசி என்ற உணர்வு வந்தால்
மத்ததெல்லாம் மாற்றம் ஆகுமே.
இதயம் துடிப்பு எதற்காக
நீயும் உயிர் வாழத்தானே.
யோசித்துக் கொண்டே இருந்தால்
யோகி ஆவாயோ?
சிந்தனை நிறுத்தி சுற்றி பார்
உலகம் இங்கு பெரியது
அதிசயங்கள் ஆயிரம் உள்ளது!
அமைதி என்ற ஒன்றில்
மனதை நிறுத்தி,
இந்த நிமிடம் உனதென்று
இறக்கை விரித்திடு.
மகிழ்ச்சி என்ற வானத்தை
இலக்காய் வைத்திடு.
மனமே நீ மாறிவிடு!



கவிஞர் சாரா ஜகன்

# எப்போதும் அவள் என்னவள்

மணம் கமலும் காரிகையின் கூந்தலில்
குடிக்கொண்டிருந்த நாட்கள்
கருவிழியாய் நான் மாற
இமையாக எனைக் காத்தவள்.
ஊரார் துரத்தி இழிவுப் படுத்த
உயிராய் எனைப் பற்றியவள்.

எங்குச் சென்றாலும் பின்னே வரும்
நிழல் போல என்பின்னே சுற்றியவள்.
என்னுள் பாதியாக இருந்தவள்.

இன்று என்னுயிரையும் எடுத்துக்கொண்டு
எங்கோ சென்றுவிட்டாள்.
உயிரில்லா வெற்று உடலாய் திரியும்
இந்த பாதகனின் மனதை தனியே தவிக்கவிட்டாள்.

கண்போல் காத்த கயல்விழியே !
ஏனடி விட்டுச்சென்றாய் எனைத் தனியே?
துயில் கொள்ள இயலவில்லை,
தூங்கச் சொல்ல அவளுமில்லை.
நான் உன் மடியில் சாயும் முன்னே,
நீ மண்ணுக்குள் சாய்ந்தது ஏனடி?
எனக்கனைத்தும் நீயாக இருக்க,
இன்று யாருமின்றி அனாதையாகிறேன் நானடி.



ஆதியும் நீயாக அந்தமும் நீயாக
உன்னோடு மீண்டும் வாழும்
என் கனவு மட்டும் மெய்யாகக் கூடாதா?
வேஷம் போடும் உலகினில்,
என்மேல் பாசம் காட்டிவிட்டு
இறுதியில் இவளும் மோசம் செய்துவிட்டாள்..

என்நெஞ்சில் குடியிருக்கும் எந்தன் கண்ணம்மா!

என் பாதைகள் தடம் மாறியதே
என் பார்வைகள் இருள் சூழ்ந்ததே
வஞ்சியின் நெஞ்சில் சாய்ந்த படியே
என் நாட்கள் மாய்ந்து போகும் வரம் தான் இனி கிடைக்காதா?

இறைவா! மீண்டும் உனை வேண்டிக்கேட்கிறேன்.
ஒருமுறை ஒருமுறை அவளை என்னிடம் கொடுத்துவிடு
அவள் முகத்தை பார்த்துக் கொண்டே இருக்கும் கணத்தில்
தாராளமாய் எங்கள் இருவரையும் அழைத்துவிடு.
இன்புற்று வருகிறோம்
எங்கள் உயிரை பறித்த நீயாவது மகிழ்ந்திரு.

கவிஞர் ரதிப்பிரியா ராஜசேகர்,இடைப்பாடி

# பிரச்சனைகளுக்கு தீர்வு நம்மிடமே




பிறக்கும்போதே பிரச்சனையுடன்
பிறக்கும் இம்மானிட பூமியில்
யாருக்குத்தான் பிரச்சனை இல்லை ?
முதலில் கல்வியில் இருந்தும், தேர்வு எழுதும் போதும்,
நல்ல மதிப்பெண் பெற்ற பின்பும்,
வேலையில் சேரவும் பிரச்சினையே!
பின்பு திருமண பந்தத்தில்
நேர்மறை சிந்தனை இருந்தால்
வாழ்க்கை என்னும் வண்டி சீராக ஓடுமே .
இல்லையேல் பிரச்சனைக்கு மேல் பிரச்சனையே!
குடும்ப ஒற்றுமையில் சகோதர,
சகோதரி பிரச்சனை.
பின்பு பிள்ளைகளால் பிரச்சனை
வயதான பின் உடல் நலப் பிரச்சினை
எந்த மகன் வீட்டில் எத்தனை நாள் இருப்பது
போன்ற பிரச்சனை.
"ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா" இது திரைப்பட பாடல் .
பிரச்சனையும் நம்மிடமே தீர்வும் நம்மிடையே!
சமயோகித புத்தியுடன் நாம் செயல்பட்டால்
உலகையே பிரச்சனைகள்
இல்லாமல் வெல்லலாம்.

கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# தெர்த்தங்கள்

எளிதாக
நிலவின் பிம்பம்
ஆற்று நீரில்,
நிஜம் காண
மேலெழும்பும்
கண்கள்.

நித்தம் நித்தம்
சுவடுகள்
அழிக்கின்றன
அலைகள்,
மீண்டும்
சுவடுகளுக்காக.



பயண
நகர்வுகளில்
மட்டுமே
ரசிக்கப்படுகின்றன,
நிற்கும்
காட்சிகள்.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# அன்பின் சாரலில்

பயணம்
கடக்கும் மரத்தோடு
சிறு புன்னகையும்
சிறு கையசைப்பும்

முகமறியாத மழலைகளின்
சந்தோசம்
தொற்றிக்கொள்ளும் நம்மையும்




உறைந்த புன்னகையில்
கிழியாத அன்பின் மணம்
எதிர்ச்சீட்டு பயணியின்
பார்வையில் உதிரும் நட்பில்

ஊர் பெயரின் விசாரனை
பரிமாற்றத்தில் முகவரியும்
புதிய உறவுகளின் கைமீட்டல்

தொடரும் சொந்தங்கள் பல
அலைபேசியின் அலைகளில்
உன்னத அன்பிலே
உட்கார்ந்த மனமும்
ஓசையின்றி மலர்ந்து
வீசும் காற்றிலே விரல் கோர்க்குது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# தேவதை

கட்டிக் கரும்பே கண்ணே
என் கனியமுதே
கரு வண்டு விழியழகே
கரு மேகம் குழலழகே!

கிளிப் பேச்சு மாறாது
பேசும் சொல்லழகே
கற்றலில் உந்தன் திறமை
கற்பூர மதியழகே!



தித்திக்கும் தேனாக தெவிட்டாது
சுவைக்கும் தெள்ளமுதே!
நித்தமும் என் நெஞ்சில்
வளர்ந்திடும் இளம்பிறையே!

வசந்தமாய் வாசல் வரும்
வெண்ணாலவின் பேரழகே
கட்டியணைத்து கவிபாடும்
கவிதையின் கலையழகே!

எட்டி எட்டி நின்று ஏங்க வைத்து
பார்க்கும் இளந்தளிரே
திட்டி திட்டி  கிறங்க வைத்து
தீர்க்கும் கற்கண்டு பேச்சழகே!

குட்டி குட்டி கதை பேசும்
செவ்வந்தி பூவழகே!
குலம் தழைக்க வந்திருக்கும்
குழந்தை இவள்
எங்கள் தேவதையே!

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# கவிதை

பூவின் அரும்பிலும்
அரும்பின் நுனியிலும்
அதன்மேல் மொட்டிலும்
வாடியிறந்த சருகிலும்
மலையின் வளைவிலும்
நதியின் நெளிவிலும்
நீரின் தெளிவிலும்
நீ மெல்ல நுழைகிறாய்.



விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்.

முன்றில் மண்ணிலும்
முளைக்கும் வேரிலும்
துளிர்த்த இலையிலும்
தளிரின் நிறத்திலும்
வானின் முகிலிலும்
நீந்தும் நிலவிலும்
நீலம் படர்ந்த வானிலும்
சாகசங்கள் பலபுரிந்து
நீ மெல்ல நுழைகிறாய்.

நாளின் விடியலிலும்
நாழிகை நகர்வுகளிலும்
என் பார்வைகளிலும்
நிஜக்கனாக்களிலும்
நீண்ட பாதைகளிலும்
பகலின் ஓரத்திலும்
நிலவின் சயனத்திலும்
பார்வைத்தொடுகையிலும்
கருவிழிக் குவியலிலும்
நீ மெல்ல நுழைகிறாய்.

கவிஞர் செண்பகச்சோலையாள்,ஆய்ஷ்,இலங்கை

# ஜெயசாம ராஜேந்திரர்



மைசூரின் பேரரசர் பட்டியலில் இவர்தானே
ஈற்றிலமை தன்மையர் ஆனாரே! ஜெயசாம
ராஜேந்திரப் பேரினரே! இன்னிசையில் நற்றேர்ச்சி
மிக்கவரே! பாடலிலே மிக்கார்வம் இளமைமுதல்
உற்றவரே! துவக்கத்தில் மேலையிசை ஆர்வத்தர்!
பின்னரவர் கர்நாடக இசைபயின்றார்! பாடல்பல
இயற்றினாரே! பத்தொன்பது நூற்றினது அறுபத்து
ஆறதனில் சென்னையில் ஆளுநராய் இருந்தபோது
சென்றவர்தான் ஐம்பத்து ஏழாண்டின் பின்வந்தார்!
பாட்டினது ஒருகூறு எண்ணற்ற வரலாற்றை
எடுத்தியம்பும்! புதுமுறையில் க்ருதிகளினை புதுவகையாம்
பண்ணினிலே வட்டித்தார்! மைசூரின் வாசுதேவா
சாரியரிடம் கர்நாடக இசையதனை பயின்றாரே!
பெங்களூரின் புத்தமைப்பின் காரணரும் அன்னவரே!
மைசூர்தன் அரண்மனையும் தர்பாரும் காண்கையில்
மட்டற்ற மாமகிழ்வு நண்ணிடுமே! யானைமேல்
அலங்கார அம்பாரி மன்னரிவர் இவர்ந்துவரல்
கண்கொள்ளாக் காட்சியன்றோ? அரசருடை அலங்காரம்
கண்கட்கு நல்விருந்தாம்! கோட்டையும் கொத்தளங்கள்
பிரம்மிக்க வைத்திடுமே! முதல்மன்னர் ராஜவுடையார்!
பதினாறு நூற்றினது பத்ததனில் நிகழ்ந்ததுவே!
உடையார்தம் வம்சமது செல்வத்தின் செழிப்புடைத்து!
கிருஷ்ணராஜ உடையாரோ பாருலகின் செல்வந்த
மாண்பினரின் ஒருவராவர்! காவிரியின் தலக்காடு
மாண்டியாபேர் மாவட்ட ஸ்ரீரங்கப் பட்டினத்தின்
அமைந்ததுவே! திப்புசுல்தான் தலைநகராய் அமைந்ததுவே!
இந்தியத்தின் சுதந்திரத்தின் போதிருந்தார் ஜெயசாம
ராஜேந்திர உடையாரே! அரண்மனைபேர் " அம்பாவிலாஸ்"!
தசராவோ களைகட்டும்! இருபத்து ஐந்தாவது
ஈற்றினராய் மிளிர்ந்திட்ட அன்னவரைப் போற்றுவமே!

கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

# ரேகைகள்

இலட்சியத்தை தேடி ஓடிடும்
ஒற்றையடிப்பாதைகள்
சந்திக்கின்றன உள்ளங்கைகளில்
ஓராயிரம் கனவுகளுடன்
வித்துக்கள் தூவப்பட்ட பாசறையானது
கருவாகி கவியாகி
காற்றோடு சமர் புரியும்.

வரலாறு படைக்க முடியும்
"வா" என்றழைக்கின்றது

மருதாணி



கவிஞர் மதீரா (அறிவிப்பாளினி),இலங்கை

# பசித்திமிர்

பெண்ணைக் கண்டதும்
பொறுக்காது மேயுதே
எண்ணத்தில் அழுக்கு
ஏராளமாய் நிறையுதே



கண்களால் கொத்திக்
களவாடிப் பார்க்குதே
மண்ணுக்குள் போகும்வரை
மனதோடு தொடருதே

வேராய் வன்மத்தைப் படரவிட்டு
வேசத்தோடு அலையுதே
போர்வை போர்த்திய
பேதை தின்னிகளே

உணர்வுகள் அடக்காத
உதாசினக் கொடூரர்களே
பிணத்தையும் காமத்தில்
பிடுங்கித் தின்னுதே

பசிக்காய் கையேந்தும்
பச்சிளம் குழந்தையையும்
புசித்திட எண்ணி
புடம் போடுதே

பணத்தை வீசிப்
பலதும் நடத்துதே
பாவிகள் பாவைகளைப்
பிணவறையில் கிடத்துதே

தேகத்தைத் தீண்ட
தேடித்தேடி தீண்டுதே
மோகத்தைக் அளவற்றுக்கட்டி
மூர்க்கமாய் வைக்குதே

பாவத்தைச் செய்ய
பச்சோந்தியாய் மாறுதே
வேகத்தில் அசுரனும்
வெள்ளாடை கட்டுதே

பேயாய்த் திரிந்து
பேரம் பேசுதே
நாயாய்த் துரத்தி
கடித்துக் குதறுதே

மோகத் தாகத்தால்
மோசம் செய்யுதே
காமப் பசித்திமிர்
கழுகாய்க் கொத்துதே

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# காதல் கவிதை

## ஏதேதோ எண்ணம் வளர்த்தேன்

உள்ளமெல்லாம் நிறைந்து
உன்மத்தம் செய்பவனே
கள்ளமில்லா உள்ளமதில்
காதல்வலை விரித்தவனே

எல்லையில்லாக் குவலயத்தில்
எண்ணங்களாய் சுழன்றடிக்க
தொல்லையென நினைக்காமல்
தோள்சாய வந்தாயோ

அன்பெனும் பாத்திரத்தில்
ஆசைகளை நிறைத்துவைத்து
துன்பமில்லா வலியாலே
துவண்டிடுதே எம்மனசு

பள்ளிச் செல்லும்
பருவம் முதல்
பார்த்துப் பார்த்து
நடந்த காலம்

கல்லூரிக் காளையாக
கடுதாசி எழுதியதும்
ஏதேதோ எண்ணங்கள்
மனசெல்லாம் பூக்கிறதே



கவிஞர் கரு.கிருஷ்ண மூர்த்தி

# நிகரெனக் கொள்வோம்

சம உரிமை கோரிடும் மாந்தரும் சரி
நிகராய் பிறரை நடத்துவதில்லையே!

தீண்டாமை எனும் போர்வையைப் போர்த்தி
உறங்குபவரை எழுப்புதலும் சாத்தியமோ?

சண்டைகளும் சச்சரவுகளும் இன்றி
சரி நிகராய் வாழ்ந்திட துயரேதும் இல்லையே!

சாதிச் சான்றிதழ் கொண்டு
சலுகைகள் பல ஏமாற்றிப் பெற்றிடும் போது

உயர்ந்தவன் தாழ்ந்தவன் இல்லை என்ற
மேடைப் பேச்சுகளும் சிரிக்குதிங்கே!

பரிந்துரைகளும் பணமும் பதவிசாய் செயல்பட
பணி நியமனமும் நிகரின்றி கிடைக்குதிங்கே!

கையூட்டுதனை பெற்று கரங்கள் வேதனை அடைந்திடினும்
கையூட்டு பெறும் ஒரு சில கரங்கள் ஓய்வதில்லையே!

பணமென்னும் மாயவலையில் சிக்கி
குணமதை என்றோ இழந்தனரே!

சரி நிகராய் மனிதரை மதித்திடா மாந்தரும்
தனது தேவைக்கு மட்டுமே நாடுவதும் முறைதானோ?

தானமதை வேண்டி ஏற்றத் தாழ்வின்றி
சரி நிகராய் நிற்போரும்

தன்நிலை மறந்து பிறரை விமர்சித்து
வருத்துவதும் ஏற்புடையதோ?

பிறப்பு முதல் இறப்பு வரை
சரி நிகராய் அனைவரையும் வழி நடத்தினால்
வாழ்வில் என்றும் இன்பமே!

நிகரெனக் கொள்வோம் நாமும்
நிதமும் நிம்மதியாய் வாழ்ந்திடுவோம்!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# கண்ணகி சிலம்பு

கண்ணகி இப்போது
இருந்திருந்தால்
சிலம்புக்கு பதிலாக
அவள் செல்போனைத்தான்
உடைத்திருப்பாள்!

காரணம்

அவள் அன்று தன்னுடைய
கால்சிலம்பைதான் கழற்றி
உடைத்திருந்தாயே
கண்ணகி நீ உடைத்த
சிலம்பின் மதிப்பே
வெகு சிறப்பு ஆகும்

இன்று

நீ இருந்திருந்தால்
சிலம்புக்கு பதிலாக
செல்போனைத்தான்
உடைத்திருப்பாய் கண்ணகி

அன்று நீ.
கோவலனுக்காக மதுரை
எரித்தாய்
அரசனின் தீர்ப்பு தவறானது
என்று சுட்டிக் காட்டினாய்



அன்று உன்னிடம் செல்போன்
இல்லை என்பதால்
விலை உயர்ந்த கால்சிலம்பை
உடைத்தாய் கண்ணகி.

இன்று நீ இருந்திருந்தால்
சிலம்புக்கு பதிலாக.
செல்போனைத்தான் உடைப்பாய்
ஆகவே கண்ணகியின்
கால்சிலம்புதான் உயர்ந்தது.

கண்ணகியின் சிலம்பு
தீர்ப்பு வழங்கியது

கவிஞர் தமிழருவி ஏ.கோபி,நத்தம்

# சிறுத்தொண்ட நாயனார்

## (பாகம் இரண்டு)

"அடியேன் மனையில் அமுது அருந்த வேண்டும்", சிறுத்தொண்டர்
இடிபோல் சிரித்தார் பைரவ அடிகளார், "வேண்டும் நர பசு"
மடியில் கொஞ்சும் பாலகன் வீட்டுக்கு ஒரு பிள்ளையாக இருக்கணும்
அடிஎடுத்து விளையாடும் பிள்ளை ஐந்து வயதுடன் இருக்கணும்"

"உன்னால் முடியுமா? முடியும் என்றால் வருவேன் உன் இல்லம்"
தன்னால் முடியும் என்றார் சிறுத்தொண்ட நாயனார் முகமலர்ந்து
இந்நாள் வரை இப்படி ஒருவரை, கையில் சூலம், பார்த்ததில்லை
என்ன செய்வது அடியாருக்கு அமுது படைப்பதில் தவறலாமா?

தன் மகன் சீராளன் இன்று ஐந்தாவது அகவை,"பிறந்த நாள்"
அன்பு மகன் சீவி முடித்து சிற்றாடையில் பள்ளிக்குச் சென்றான்
வன்மமாக சிசுவதை கேட்கும் பைரவரை சிவனாகவே கண்டார்
"என் கடன் சிவப்பணி , பொறுங்கள் கறி அமுதுடன் வருகிறேன்"

"நில்,கவனி, புறப்படு, வீட்டில் அழுது புலம்பும் ஓலம் வரலாகாது
சொல், பிரியமானவள் மகனை மடியில் பிடிக்க நீவீர் அரியணும்
கல் மனதுடன் செயல் கூடாது மலர்ந்த மனதுடன் செயல் படணும்
தில்லைக் கூத்தனே சாட்சி, போ" என்றார் வட தேசத்து அடியார்

எங்கே அடியாரைக் காணலை ஆவலோடு கேட்டாள் இல்லாள்
அங்கே நடந்ததை கேட்டறிந்தாள் திருவெண்காட்டு நங்கை
இங்கிதமாக கணவனோடு சென்றாள் பாலனை அழைத்துவர
தங்க மகன் புன்னகையோடு துள்ளிக் குதித்து வீடு வந்தான்

ஆசையோடு வந்த மகனை அணைத்து முகம் திருத்தினாள்
பாசத்தோடு அவன் தலை சீவி பின்னலிட்டு நீறு பூசினாள்
நேசத்தோடு முத்தம் தவிர்த்தாள் எச்சில் பண்டமகிவிடுமே
வாசம் வீசும் மகனை அன்புக் கணவனிடம் ஒப்படைத்தாள்



கனிவாய் பிள்ளையின் கை காலை மடியில் பிடித்தாள்
இனிய மைந்தன் முக மலர்ந்தான் புன்னகை நடனமாட
தனிமா மகனை தந்தை கருவி கொண்டு தலை அரிந்தார்
இனிய மழலையின் தலை தவிர்த்து பிள்ளைக் கறி தயார்

இறைச்சிகளை தனிதனியாக அறுத்து, எலும்பு நீக்கி
முறையாக கறிக்கு வேண்டிய மசாலாவை சேர்த்து
கறைகண்டன் அடியாரை இல்லம் அழைத்து வந்தார்
மறைக்காது எல்லா கறிகளையும் இலையில் வைத்தார்

சிசுவின் உறுப்புகள் பார்த்து கேட்டார் தலை கறி எங்கே
விசித்திரமாக நினைத்து கூறினார் தலை கறி ஆகாது
விசுவாசமான பணிப்பெண் "தனியே சமைத்துள்ளேன்"
பசுவைப்போல் சாதுவாக வேண்டினார், "அருந்தலாமே"

என்னோடு அமுதுண்ண வேண்டும் ஒரு அடியார் அழைத்துவா
என்ன இது பிள்ளைக்கறி உண்ண தானே அடியாராக அமர்ந்தார்
உன் மகன் எங்கே தாயே வாசல் சென்று அவனை அழைத்து வா
என் மகனே சீராளா என்றழைக்க ஓடிவந்தான உயிருடன் சீராளன்
எம்பெருமான் உமாதேவி முருகனோடு திருவருள் புரிந்தார்.

(முற்றும்)

கவிஞர் ந.திருக்காமு

# உலகத் தொலைத்தொடர்பு தினம் (மே 17)

எண்ணங்களை, மகிழ்வுகளை, துயரங்களை, தகவல்களை
ஏக்கங்களை, காதலை, ஊடலை, கருத்துகளைப்
பரிமாற உறுதுணையாம் தொலைத்தொடர்புத் துறையே!
தகவல் பரிமாற்றம் சமுதாய முன்னேற்றம்!
செல்வந்தர் இல்லங்களின் செல்லப்பிள்ளை அந்நாளில்
தரைவழித் தொலைபேசி!! ஆரம்பகால அரிச்சுவடி
"நம்பர் ப்ளீஸ்"!. விரும்பிய எண்களை
நாமே தொடர்புகொள்ள தானியங்கித் தொழில்நுட்பம்!
மின்னியல் வருகையால் வண்ணங்களில், அழைப்பொலியில்,
வடிவங்களில் மாற்றங்கள்! உள்நாடு, வெளிநாடு
தொடர்பளிக்க, பொதுத் தொலைபேசி நாடெங்கும்!
ஹலோஹலோ சுகமா? அந்நாளின் பாடலது!
டெலிபோன் மணியோசை சிரிப்புக்கு உவமையாச்சு!
கணினிகளை இணையத்தில் இணைத்தது தொலைபேசி!
காதலுக்கு இன்டெர்னெட் எனும்விதி உண்டாச்சு!
அகண்ட அலைவரிசைத் தொழில்நுட்ப வரவினால்
இணைய சேவையொடு இணைந்தது குரல்சேவை!
செல்லுமிடமெலாம் செல்லுடன் செல்கவென பின்னாளில்
எங்குநாம் சென்றாலும் தங்குதடையின்றி இணைப்பளிக்க
விண்முட்டும் கோபுரங்கள்! குரலொடு குறுஞ்செய்தி!
மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிதென்பர்!
திறன்பேசி வரவாலே சுருங்கியது உலகம்!
அனைத்து சேவைகளும் அதனுள் அடக்கம்!
காற்றே ஊடகமாம் கம்பியிலாத் தொடர்பளிக்க!
அருகலை அதன்பெயராம்! பெருகிடும் தேவைக்கு
அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பம் புதுவரவாய்!
குழந்தைகள் அழுதனர் பொம்மைக்கு அந்நாளில்!
தவழ்கிறதே திறன்பேசி அவர்களிடம் இந்நாளில்!
உலகத் தொலைத் தொடர்புத் தினத்திலே
வளர்க இத்துறையென்று உளமார வாழ்த்துவமே!




கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# பேராசிரியர் சி. இலக்குவனார்

## (கட்டுரை)

### வாழ்க்கைச் சுருக்கம்




தமிழ்நாட்டின் அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் (இன்றைய நாகப்பட்டிணம் மாவட்டம்), திருத்துறைப்பூண்டிக்கு அருகில், வாய்மைமேடு என்னும் சிற்றூரில், சிங்காரவேலர்-இரத்தினத்தாச்சி ஆகியோருக்கு இரண்டாவது மகனாக 1909 நவம்பர் 17ம் நாளில் பிறந்தார்.

### கல்வி

#### தொடக்கக் கல்வி

வாய்மேட்டில் சுப்பையா ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளியிலும் கண்ணுசாமி ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளியிலும் பயின்றார். பின்னர் வாய்மேட்டில் இருந்த அரசு தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்த இலக்குவனாரின் பள்ளிப்படிப்பு தடைப்பட்டது. தமது அண்ணன் நல்லபெருமாளுக்கு உதவியாக வயல்வேலைகளைக் கவனிப்பதும் மாடுகளை மேய்ப்பதுமே அவரது வேலையாயிற்று.

#### நடுநிலைக் கல்வி

தன் பிள்ளை படிக்க வேண்டும் என்று அவரது தாயார் விழைந்தமையால் தஞ்சாவூர் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை சார்பில் இராசாமடம் என்னுமிடத்தில் இருந்த நடுநிலைப் பள்ளியில் 1924ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். இங்கு இவர் எட்டாம் வகுப்புப் படித்தபொழுது இலட்சுமணன் என இவரது பெற்றோர் இட்ட பெயரை, இவர்தம் தமிழாசிரியர் சாமி சிதம்பரனார், "இலக்குவன்" என மாற்றச் செய்தார்.

# பேராசிரியர் சி. இலக்குவனார்

(கட்டுரை)

## கல்வி

### உயர்நிலைப் பள்ளிக் கல்வி

பின்னர் 1924ஆம் ஆண்டில் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை சார்பில் ஒரத்தநாட்டில் இருந்த உயர்நிலைப்பள்ளிகளில் பயின்று தமது ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். அங்கு பொன்னண்ணா களத்தில்வென்றார் என்பவரிடம் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றார்.

**புலவர் பட்டக் கல்வி -** திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று 1936ஆம் ஆண்டில் புலவர் பட்டம் பெற்றார்.

### கீழைமொழி இளவர் பட்டம்

அன்னாளைய சென்னைப் பல்கலைக் கழகம் வகுத்திருந்த விதியின்படி வித்துவான் பட்டம் பெற்றவர் இடைநிலை வகுப்பிலும் கலை இளவர் வகுப்பிலும் இரண்டாம் பிரிவில் இருந்த ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெற்றால், அவருக்கு கீழைமொழிகளில் இளவர் (BOL) பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டம் கலைமுதுவர் பட்டத்திற்கு இணையாகக் கருதப்பட்டது. இலக்குவனார் ஆசிரியப்பணி ஆற்றிக்கொண்டே ஆங்கிலத் தேர்வுகளில் வெற்றிபெற்று கலைமுதுவர் ஆனார்.

### கீழைமொழி முதுவர் பட்டம்

பின்னர் தமிழ்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Growth of Tamil Language) என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து கீழைமொழிகளில் முதுவர் (MOL) பட்டமும் பெற்றார்.

### முனைவர் பட்டம்

இலக்குவனார், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, விரிவாக ஆய்வும் நிகழ்த்தித் தமது முனைவர் பட்டப்பேற்றிற்கான ஆய்வேட்டை அளித்தார். 1963-இல் முனைவர் பட்டப்பேற்றிற்காக Tholkappiyam in English with critical studies என்னும் ஆய்வேட்டை அளித்து 1963 ஆம் ஆண்டில் 53 அகவையில் முனைவர் பட்டம் பெற்றார்.

# பேராசிரியர் சி. இலக்குவனார்

(கட்டுரை)

## குடும்பம்

இவர் திருத்தணியில் ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது மலர்க்கொடி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். பின்னர் தம்மை விரும்பியவரும் தம் மனைவி மலர்க்கொடிக்குத் தங்கையுமான நீலகண்டேசுவரியை மணந்துகொண்டார்.

திருவேலன், மறைமலை, திருவேங்கடம், திருவள்ளுவன், மதியழகி, நல்லபெருமாள், செல்வமணி, நாகவல்லி, அங்கயற்கண்ணி, அருட்செல்வி, அம்பலவாணன் ஆகிய பதினொரு மக்களை இலக்குவனார் பெற்றனர்.

## ஆசிரியப் பணி

திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றபின், அக்கல்லூரியிலேயே சிலகாலம் பணியாற்றினார்.

1936 சூன் மாதம் முதல் 1942ஆம் ஆண்டு வரை தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் (Tanjore District Board High Schools) தமிழாசிரியப் பணிபுரிந்தார்.

அதன்பின்னர் 1942 முதல் 1945 வரை திருவையாறு அரசர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த இலக்குவனார், அன்றைய சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவராகிய செ.தெ.நாயகம், குலசேகரன்பட்டினத்தில் தொடங்கிய தமிழ்க்கல்லூரியில் முதல்வராகப் பணியமர்த்தம் பெற்றார். பின்னர் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், 1947-இல் விருதுநகரில் தொடங்கப்பெற்ற வி.இ.செந்திற்குமாரநாடார் கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவராகவும் பணிபுரிந்தார்.

# பேராசிரியர் சி. இலக்குவனார்

(கட்டுரை)

## ஆசிரியப் பணி

1952 முதல் 1955 வரை புதுக்கோட்டையில் பி.ஏ. சுப்பிரமணியனார் உருவாக்கிய திருக்குறள் கழகத்தில் ஞாயிறுதோறும் திருக்குறள் வகுப்புகள் நடத்தினார்.

1955 — 56 ஆம் கல்வியாண்டில் திருவெறும்பூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர், 1956 முதல் 1958 வரை ஈரோடு காசனக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் , 1958 முதல் 1961 வரை நாகர்கோயில் தெ.தி. இந்துக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், 1961 முதல் 1965 வரை மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர், ஐத்திராபாத்தில் உள்ள உசுமானியா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவர், 31.12. 1970 வரை நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு என இவர் பணியாற்றிய கல்லூரிகளின் பட்டியல் பெரிதாகும்.



1944-இல் இவர் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது இவரிடம் தமிழ் பயின்ற, இன்றைய இந்தியப் பொதுவுடைமைக் கட்சித்தலைவர்களில் ஒருவராகிய தோழர் நல்லகண்ணு, "அன்றைய தமிழ் வகுப்புகளில் வருகைப்பதிவை ஆங்கிலத்தில் மாணவர்கள் கூறிவந்த நிலையை மாற்றி உளேன் ஐயா எனக் கூறவைத்தவரும் பிற்காலத்தில் தமிழகமெங்கும் இம்மாற்றம் ஏற்படவும் காரணமாக இருந்தவர் இலக்குவனாரே" என நல்லுகண்ணு அவர்கள் கூறுகிறார்.

# பேராசிரியர் சி. இலக்குவனார்

(கட்டுரை)

இதழ்கள் வெளியிடல்

1944 முதல் 1947 வரை இவர் நடத்திய "சங்க இலக்கியம்" வார இதழ் புலவருக்கு மட்டுமே உரியதாகக் கருதப்பட்டுவந்த சங்க இலக்கியங்களை மக்களிடையே பரவ வழிவகுத்தது. சிறுகதை வடிவிலும் ஓரங்க நாடகங்களாகவும் சங்கப்பாடல்களை அறிமுகம் செய்த இலக்குவனாரின் முயற்சியே.

இலக்குவனாரின் நடைப்பயணம்

விருதுநகரில் இருந்தபோது இலக்கியம் (மாதமிருமுறை), தஞ்சாவூரில் இருந்தபோது திராவிடக்கூட்டரசு மதுரையிலிருந்த போது குறள்நெறி எனப் பல்வேறு இதழ்களை நடத்தினார். 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இருமுறை கைது செய்யப்பட்டு சிறைவாழ்வும் பணிநீக்கமும் பெற்ற இலக்குவனார், 1965 மே முதல் திசம்பர் வரை ஏழு மாதங்கள் தமது ஏட்டை நாளிதழாகவும் நடத்தினார். விற்பனையாளர்கள் உரியமுறையில் பணம் கொடுக்காத ஒரே காரணத்தாலேயே இவ்விதழ் நிறுத்தப்பட்டது.



வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க என்னும் குறிக்கோளோடு குறள்நெறி என்னும் இதழை 15.01.1964ஆம் நாள் சி. இலக்குவனார் தொடங்கினார்.

Dravidan Ferderation, Kurnlneri என்னும் இரண்டு ஆங்கில இதழ்களையும் நடத்தினார்.

# பேராசிரியர் சி. இலக்குவனார்

## (கட்டுரை)

### நூல்கள்

- எழிலரசி அல்லது காதலின் வெற்றி (செய்யுள்) (1933)
- மாணவர் ஆற்றுப்படை (செய்யுள்)
- துரத்தப்பட்டேன் (1952) (செய்யுள்)
- தமிழிசைப் பாடல்கள் (செய்யுள்)
- என் வாழ்க்கைப் போர் (ஆராய்ச்சி) (1972)
- அமைச்சர் யார்? (ஆராய்ச்சி) (1949)
- அம்மூவனார் (ஆராய்ச்சி)
- எல்லோரும் இந்நாட்டு மன்னர் — பகுதி 1 (ஆராய்ச்சி) (>1956)
- எல்லோரும் இந்நாட்டு மன்னர் — பகுதி 2 (ஆராய்ச்சி) (>1956)
- திருக்குறள் எளிய பொழிப்புரை (விளக்கவுரை)
- தொல்காப்பிய விளக்கம் (விளக்கவுரை)
- மாமூலனார் காதற் காட்சிகள் (விளக்கவுரை) (>1956)
- வள்ளுவர் வகுத்த அரசியல் (ஆராய்ச்சி)
- வள்ளுவர் கண்ட இல்லறம் (ஆராய்ச்சி)
- இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (ஆராய்ச்சி)
- கருமவீரர் காமராசர் (வரலாறு)
- அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து (செய்யுள்)
- பழந்தமிழ்
- தமிழ் கற்பிக்கும் முறை (ஆராய்ச்சி)
- தொல்காப்பிய ஆராய்ச்சி (1961) (ஆராய்ச்சி)
- சங்க இலக்கியச் சொல்லோவியங்கள் (1990)
- Tholkappiyam in English with Critical Studies
- Tamil Language (1959)
- The Making of Tamil Grammar
- Brief Study of Tamil words

# பேராசிரியர் சி. இலக்குவனார்

## (கட்டுரை)

**சிறைவாழ்க்கை**

**முதற் சிறை வாழ்க்கை - 25 — சனவரி — 1965ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போரின் பொழுது 01.02.1965 ஆம் நாள் சி. இலக்குவனார் கைது செய்யப்பட்டார். இரண்டாம் சிறை வாழ்க்கை: கல்லூரிகளில் எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயிற்றுமொழி ஆக்க வேண்டும் என்னும் கோரிக்கை. 01.05.1965ஆம் நாள் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் மூன்றரை மாதங்கள் அடைக்கப்பட்டார்.**

**தமிழ்க் காப்புக் கழகம்**

**மதுரையை அடுத்த திருநகரில் 06.08.1962 ஆம் நாள் தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும் என்னும் நோக்கத்தை முன்வைத்து தமிழ்க் காப்புக் கழகத்தை சி. இலக்குவனார் தொடங்கினார். இக்கழகத்திற்கு அவர் தலைவராகவும் புலவர் இரா. இளங்குமரன் பொதுச் செயலாளராகவும் அமைந்தனர். இக்கழகம் தமிழில் பேசுக! தமிழில் எழுதுக! தமிழில் பெயரிடுக! தமிழில் பயில்க! என்னும் நான்கு செயல் திட்டங்களை முன்வைத்துப் பணியாற்றியது.**

**சி. இலக்குவனாரின் மாணவர்கள் சிலர்**

**பல்வேறு துறைகளில் புகழ்பெற்ற பலர் சி. இலக்குவனாரிடம் தமிழ் பயின்று உள்ளார்கள். அவர்களில் சிலர்: மு. கருணாநிதி, முனைவர் கி. வேங்கடசுப்பிரமணியன், நல்லகண்ணு, முனைவர் க. காளிமுத்து, நா. காமராசன், பா.செயபிரகாசம், இன்குலாப், முனைவர் பூ. சொல்விளங்கும்பெருமாள், [சேடபட்டி முத்தையா]**



# பேராசிரியர் சி. இலக்குவனார்

(கட்டுரை)

## பெற்ற பட்டங்கள்

முத்தமிழ்க் காவலர், செந்தமிழ் மாமணி, பயிற்சிமொழிக் காவலர், தமிழர் தளபதி, தமிழ் காத்த தானைத் தலைவர், இலக்கணச் செம்மல், தமிழ் அரிமா, தமிழ்ப் போராளி, 20ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர், இரண்டாம் நக்கீரர், பெரும் பேராசிரியர், தன்மானத் தமிழ் மறவர், இந்தி எதிர்ப்புப் படைத் தளபதி, செந்தமிழ்ப் படையின் மானச் செம்மல்

## இறுதிக் காலம்

1967-இல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றபின்னர் அறிஞர் அண்ணா அவர்களால், மீண்டும் இலக்குவனார் பணிபுரியும் வாய்ப்பைப்பெற்றார். சென்னை மாநிலக்கல்லூரியில் தலைமைத் தமிழ்ப்பேராசிரியராகப் பணியேற்ற இவரால் ஓராண்டுக்கு மேல் அப்பணியிலும் நீடிக்கமுடியவில்லை. அன்றைய கல்வியமைச்சரிடம் தமிழைப் பயிற்சிமொழியாக்குமாறும் ஆங்கிலத்துக்குச் சார்பாக நடக்கவேண்டாமெனவும் இவர் கூறியமையே இவரது வேலைக்கு உலைவைத்த செய்தி தமிழ்நாடு அறிந்த ஒன்றே. அதன்பின்னர் ஐதராபாது உசுமானியப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இரண்டாண்டுகள் பணியாற்றியபின்னர் தமது நண்பரின் வேண்டுகோளுக்கிணங்க நாகர்கோயில் இந்துக்கல்லூரியில் முதல்வராகப் பணிபுரிந்து 1970 திசம்பரில் ஓய்வு பெற்றார்.

மீண்டும் குறள்நெறி இதழைத் தொடங்கி நடத்தியும் நாடெங்கும் சென்று சொற்பொழிவாற்றியும் தமது தமிழ்ப்பணியைத் தொடர்ந்த இலக்குவனார் நீரிழிவு நோய் காரணமாக 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் நாள் காலமானார்.



கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
வெற்றிக்கு திட்டமிடாதுவர்கள்
தானாகவே தோல்விக்கு
திட்டம்போட்டு விடுகிறார்கள்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com
Aagaramuthalaa

aagaramuthala@gmail.com